பள்ளிக்
கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல்
மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

# தேன்சிட்டு

THEN CHITTU ★
FORTNIGHTLY ★

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்

- 1-15 ஆகஸ்ட் 2023
- சிட்டு 2 ★ இதழ் 17
- விலை : ரூ. 10/-
- சென்னை

- 1-15 AUGUST 2023
- Chittu 2 ★ Issue 17
- Price : Rs. 10/-
- Chennai

## விடுதலைக் களத்தில் பெண்கள் படை

தலைமை ஏற்றவர் பற்றி அறிய
**21**ஆம் பக்கம் வருக..







04 மந்திர அடுப்பு



16 பேய்க்கணவாய் பேசுகிறேன்



20 விறுவிறு வாலிபால்




**வாசிப்பு இயக்கம்** வாயிலாக உங்கள் பள்ளிகளுக்கு வரும் நூல்களை வாசியுங்கள்!



6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!

# போற்றுவோம் தலைவர்களை!



தன் உயிரைக் கொடுத்த தலைவர்கள்
தன் இளமையை இழந்த இளைஞர்கள்
தன் நாட்டு சுதந்திரத்தையே நினைத்து,
தன் குடும்பத்தை இழந்த வீரர்கள்

ஆங்கிலேயன் அடித்து நொறுக்கினாலும் - அந்த
ஆதிக்கத்தை எதிர்க்க தயங்கவே இல்லை
அந்நியர் நம் தாய் மண்ணை
ஆள ஒருபோதும் அனுமதிக்கவே இல்லை

மரம் வெட்ட வெட்ட தழைவது போல
நம் தலைவர்களுக்கும் எத்தனை தடைகள்...
தலை கொடுத்தாவது தடைகளைத் தகர்த்தார்கள்
தன்னிகரில்லா விடுதலை காற்றைத் தந்தார்கள்.



- சு.கனிமொழி, 8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய ந.நி.பள்ளி,
கூகலூர், கோபி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

## உள்ளே...



ஸ்லிங்கி நடப்பது எப்படி? 5



ஜெல்லி மீன்களுக்கு மரணமே கிடையாதாமே! 9



டினோசர்களின் கதை 18

தேன்சிட்டு
Then Chittu Fortnightly
▸ 01 - 15 ஆகஸ்ட் 2023
▸ சிட்டு 2 * இதழ் 17
▸ 01 - 15 August 2023
▸ Chittu 2 * Issue 17

***
பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி
***
அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்
***

அச்சகம் :
ராசி கிராபிக்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
69-71/A,
சிட்கோ தொழிற்பேட்டை,
திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்,
பின் கோடு – 600 124.
***

பதிப்பகம்:
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்.
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
எண் 68, கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006
***
மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

# மந்திர அடுப்பு

ஒரு ராஜாவின் அரண்மனையில் ஒரு மந்திர அடுப்பு இருந்தது. ராணி அதில்தான் சமையல் செய்வார்.

'அடுப்பே டும் டும்
சமைத்து வை.
அரசர் விருந்து
படைத்து வா'

இந்தப் பாட்டை ராணி பாடினால் போதும். உடனே, அடுப்பு சமைத்துவிடும். ராஜாவுக்கு வேண்டியபடி சாப்பாடு தயாராகும். இதன் புகழ் நாடெங்கும் பரவியது.

ஒருநாள் ராட்சசன் ஒருவன் அந்த மந்திர அடுப்பைத் திருடிக்கொண்டு போய்விட்டான். அன்று ராணி சாதாரண அடுப்பில் சமைத்தார். அந்தச் சாப்பாடு ராஜாவுக்குப் பிடிக்கவில்லை.

"சாப்பாடு ஏன் நன்றாக இல்லை?" என்று கேட்டார்.

"மந்திர அடுப்பு திருடு போய்விட்டது நான் என்ன செய்வேன்?" என்றார் ராணி.

"சாப்பாடுதான் சுகமில்லை. கொஞ்சம் பாட்டாவது கேட்கிறேன். அந்த ரேடியோவை இயக்கு" என்றார் ராஜா.

ரேடியோவை ராணி இயக்கியபோது அது பாடாமல் பேசியது.

"ஹலோ, நான்தான் சோர கம்பீர ராட்சச மார்த்தாண்டன் பேசுகிறேன். மந்திர அடுப்பில் வேலை செய்யத் தெரிந்த ஆண் தேவை. அப்படி வருபவர்களை இம்சிக்க மாட்டேன். நிறைய சன்மானமும் தருகிறேன்" என்று ரேடியோவில் ராட்சசன் சொன்னான்.

"நம் அடுப்பைத் திருடியதுமில்லாமல் சமைக்க ஆளும் வேண்டுமாமே. என்ன துணிச்சல்?" என்று பல்லைக் கடித்தார் ராஜா.

"அப்பா, நான் போகிறேன். ராட்சசனை ஏமாற்றி அடுப்பை மீட்டு வருவேன்" என்றான் ராஜகுமாரன். தன் ஏரோப்ளேனில் 'கும்ம்' என்று கிளம்பி, ராட்சசன் வீட்டில் போய் இறங்கினான்.

"நீ யார்?" என்று கர்ஜித்தான் ராட்சசன்.

"நான் ஒரு பொறியாளர். மந்திர அடுப்பில் வேலை செய்வதற்காக வந்தேன்" என்றான் ராஜகுமாரன்.

ராட்சசன் மகிழ்ச்சி அடைந்தான். "அடுப்பு அதோ இருக்கிறது. சமையல் செய் பார்க்கலாம்" என்றான்.

ராஜகுமாரன் அடுப்பின் கிட்டப் போனான்.

'அடுப்பே டும் டும்
சமைத்து வை.
ராட்சசன் தின்னப்
படைத்து வை.'

என்று மெல்லிய குரலில் பாடினான்.

உடனே, அருமையான பட்சண, பலகாரங்கள் அடுப்பிலிருந்து வெளியே வந்தன. அவற்றை ராட்சசன் ஆசையோடு வயிறு நிறைய தின்றான். அப்படியே தூங்கிப் போனான்.

'இதுதான் சரியான நேரம்' என்று நினைத்த ராஜகுமாரன் அடுப்பைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். வாசலில் ராட்சசனின் நாய் இருந்தது. அது 'லொள் லொள்' என்று குரைக்கத் தொடங்கியது.

'அடடா, இது ராட்சசனை எழுப்பிவிடும்போல் இருக்கிறதே' என்று பயந்தான் ராஜகுமாரன்.

'அடுப்பே டும் டும்
சமைத்து வை
ராட்சசன் நாயை
மயக்கி வை'

என்று பாடினான்.

உடனே, அடுப்பில் பலவகை மாமிசத் துண்டங்கள் வந்தன. அது குரைப்பதை நிறுத்திவிட்டது. மாமிசத்தை ஆவலாய்த் தின்னத் தொடங்கியது.

ராஜகுமாரன் ஓட்டமாய் ஓடினான். ஏரோப்ளேனில் அடுப்பை வைத்தான். தானும் ஏறிக் கொண்டான். 'கும்ம்ம்' என்று புறப்பட்டு அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

– தி.ஜ.ரா.

நன்றி: சாகித்ய அகாடமி வெளியிட்ட சிறுவர் கதைக் களஞ்சியம்.



ஓவியம் : பா. செந்தில்குமார்

ஆகஸ்ட் 15
சுதந்திர தினம்

இந்திய தேசியக் கொடி செவ்வக வடிவில் மூவர்ணத்தில் அமைந்துள்ளது.

# ஸ்லிங்கி நடப்பது எப்படி?



திருவிழாக்களில் பல வண்ணங்களில் உள்ள ஸ்லிங்கி (slinky) வாங்கியிருப்பீர்கள். அதை வைத்து அழகாக விளையாடியும் இருப்பீர்கள். ஸ்லிங்கியை மாடியின் மேல் படியில் வைத்தால், மனிதர் நடந்து வருவதுபோல இதுவும் இறங்கி வரும். அது எப்படிச் செயல்படுகிறது தெரியுமா?



**நிலைமம் (Inertia)**

ஸ்லிங்கியின் முனைப் பகுதி. இது கையில் அல்லது ஏதேனும் ஒன்றின் மீது விழும்போது, அதைப் பிடித்துக்கொள்வதைப் போல அசையாத தன்மைக்கு மாறிவிடும்.

**ஸ்லிங்கியின் விசை (Forces at play)**

ஸ்லிங்கி படிகளில் நடக்கும்போது புவியீர்ப்பு விசைதான் அதன் மீது செயல்படும் முக்கியமான விசை ஆகும்.

**முதல் அடி (First step)**


ஸ்லிங்கி முதல் அடி எடுத்து வைக்கும்போது, சுருள்கள் மீது புவியீர்ப்பு செயல்படும். அப்போது ஸ்லிங்கியின் செயலற்ற பகுதியில் சேர்த்து வைக்கப்பட்ட ஆற்றல், இயக்க ஆற்றலாக மாறுகிறது.

**ஆற்றல் மாற்றம் (Transfer of energy)**

ஸ்லிங்கி ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும், ஒலி அலையைப் போல சுருள் நீளத்தின் மீது ஆற்றல் மாற்றம் நிகழ்கிறது.

**வேகம் (Speed)**

ஸ்லிங்கியின் செல்லும் வேகம் என்பது, அது செய்யப்பட்டிருக்கும் உலோகத்தின் நிறை, நீளம் மற்றும் ஒவ்வொரு படிக்கும் இடையேயுள்ள தூரம் ஆகியவற்றைப் பொறுத்தது. படிகள் செங்குத்தாக இருந்தால், ஸ்லிங்கியின் வேகம் அதிகமாக இருக்கும்.





போர்க்கப்பல் பொறியாளரான ரிச்சர்ட் டி.ஜேம்ஸ் (Richard T. James) அமெரிக்காவைச் சேர்ந்தவர். கப்பலில் எடை அதிகமான பொருட்களை அடுக்குவதற்கு உலோகங்களால் ஆன சுருள்களை உருவாக்கினார். அவற்றில் ஒன்று தவறி விழுந்து நடப்பதுபோல சென்றது. அதைப் பார்த்த ஜேம்ஸ், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருளை அதுபோல உருவாக்கத் திட்டமிட்டார்.

இதுகுறித்து தன் மனைவியிடம் ஆலோசித்தார். அவரின் மனைவி ஆங்கில அகராதியைப் பார்த்து வைத்த பெயர்தான் ‘ஸ்லிங்கி’. ஸ்லிங்கி என்றால் வசீகரமான, வளைவுகள் கொண்டது என அர்த்தம்.

1945ஆம் ஆண்டு ஜேம்ஸ் இந்த ஸ்லிங்கியை முழுமையாக வடிவமைத்துவிட்டார். 25 மீட்டர் வயரை வளைவுகள் கொண்ட சுருளில் பொருத்தி வடிவம் கொடுத்திருந்தார். பத்து நிமிடங்களில் ஸ்லிங்கியைத் தயாரிக்கும் இயந்திரத்தை உருவாக்கி, அதற்குக் காப்புரிமையையும் பெற்றார். அடுத்த சில ஆண்டுகளிலேயே உலகம் முழுவதும் ஸ்லிங்கி புகழ்பெற்றது.



**ஆகஸ்ட் 15**
**சுதந்திர தினம்**

ரவீந்திரநாத் தாகூர் வங்காள மொழியில் இயற்றிய ‘ஜன கண மன’ பாடலின் ஹிந்தி வடிவம் நம் தேசிய கீதமாக ஜனவரி 24, 1950இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



# சுவற்றில் - சுவரில்: எது சரி?



நீங்கள் பயணம் செய்யும்போது ஒரு வாக்கியத்தை அடிக்கடி பார்த்திருப்பீர்கள். ஆனால், அது இரண்டு விதங்களில் எழுதப்பட்டிருக்கும்.

**சுவற்றில் விளம்பரம் செய்யாதீர் - சுவரில் விளம்பரம் செய்யாதீர்**

இந்த இரண்டு வாக்கியங்களின் வேறுபாடு என்பது சுவரில் / சுவற்றில் மட்டுமே. இந்த இரண்டில் எது சரியானது என்ற குழப்பம் உங்களுக்கு எழுந்திருக்கும்.

சுவற்றில் அல்லது சுவரில் இவற்றின் வேர்ச்சொல் என்பது சுவர். இதில் 'இல்' எனும் வேற்றுமை உருபு சேர்கிறது. அப்படியெனில் ர் + இல் = சுவரில் என்றுதான் மாற வேண்டும். இடையின 'ர' என்பது ஒருபோதும் வல்லின 'ற'வாக மாறாது. அதனால், சுவரில் என்பதே சரியானது.

## தவற்றை / தவறை எது சரி?

'பாபு அந்தத் தவறை செய்துவிட்டான்' என்று எழுதும்போது, தவற்றை/தவறை இரண்டில் எதைப் பயன்படுத்துவது என்ற குழப்பம் ஏற்படும்.

தவறு எனும் சொல், உயிர்த்தொடர் குற்றியலுகரம். இத்தோடு ஐ எனும் வேற்றுமை உருபு சேரும்போது கடைசி எழுத்து இரட்டிக்கும் என்பதே இலக்கண விதி. அதன்படி, தவறு + ஐ என்பது தவற்றை என்பதே சரியானது.

இதேபோலத்தான் அடையாறு, பெரியாறு, கயத்தாறு போன்ற சொற்களையும் பார்க்க வேண்டும். அடையாற்றை, பெரியாற்றில், கயத்தாற்றில் என்றே எழுத வேண்டும்.

## சொல் கோபுரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | | | | | | |
| | ழு | | | | | |
| | ல | | | | | |
| | ழ | க் | | | | |
| ஒ | | | க | | | |
| | ழு | | வ | | தி | |
| தி | | | ள் | | | ர் |

இங்கே காணப்படும் கட்டத்தினுள் சில எழுத்துகள் விடுபட்டு இருக்கின்றன. அதற்கான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்து காலியாக உள்ள இடத்தில் சரியான எழுத்துகளை பூர்த்தி செய்து விடையைக் கண்டுபிடியுங்கள்.

1. பொங்கல் திருநாள் வரும் மாதம்
2. வானவில் நிறங்களின் எண்ணிக்கை
3. ஆற்றைக் கடக்க உதவுவது
4. சூரியன் உதிக்கும் திசை
5. பாலைவனத்தின் கப்பல்
6. உருகி வெளிச்சம் கொடுப்பது
7. திருக்குறளை எழுதியவர்

விடைகள்:
1. தை 2. ஏழு 3. பாலம் 4. கிழக்கு 5. ஒட்டகம் 6. மெழுகுவர்த்தி 7. திருவள்ளுவர்

**ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்**

தேசியக் கொடி இந்தியப் பெண்கள் சார்பாக 1947ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 14 ஆம் தேதி நாட்டிற்கு வழங்கப்பட்டது.

# ஆங்கிலம் அறிவோம்!

ஒரு மொழியில் நன்கு எழுதுவதற்கும் பேசுவதற்கும் நிறைய சொற்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். கீழுள்ள சொற்களில் முதல் எழுத்தை மாற்றினால் வேறு சொல் கிடைக்கும். உதாரணத்திற்கு Hat எனும் சொல்லில் H யை மட்டும் மாற்றினால், Fat என்பது கிடைக்கும். இடப்புறத்தில் உள்ள சொற்களில் முதல் எழுத்தை மாற்றினால் கிடைக்கும் சொற்கள் வலப்பக்கத்தில் இடம் மாற்றிக்கொடுக்கப்பட்டுள்ளன. சரியானதைக் கண்டுபிடியுங்கள்.




விடைகள்:
1.Rat-Cat, 2.Van-Fan,
3.Bat-Mat, 4.Map-Cap,
5.Ten-Pen, 6.Bin-Win,
7.Box-fox, 8.Run-Sun

**ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்**

நம் இந்தியக் கொடியை வடிவமைத்தவர் பிங்கலி வெங்கய்யா. இதன் வடிவமைப்பு 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.

# கை கொடுக்கும் கை

மனநல மருத்துவர் மகேந்திரபூபதியைக் காண ஒரு சிறுமியுடன் அவள் பெற்றோரும் வந்திருந்தனர்.

"வணக்கம் டாக்டர், இவ எங்க மகள். இரண்டாம் வகுப்புப் படிக்கிறா. கொஞ்சநாளா, எழுதவும் சாப்பிடவும் ஏதாச்சும் பொருள் எடுக்கவும் என எல்லாத்துக்கும் இடது கையை மட்டுமே பயன்படுத்துகிறாள். இடது கைப்பழக்கத்தை உடனடியாக நீங்கதான் நிறுத்தணும். இவளைத் திருத்தணும்".

"இதுக்காகவா வருத்தப்படுறீங்க! கவலைப்படற அளவுக்கு இதில ஒண்ணும் இல்ல. இடது கையை உபயோகித்த எத்தனையோ பேர் மேதைகளாக இருந்தனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்றார் மருத்துவர்.

"அப்படியா?"

"ஆமாம். ஜூலியஸ் சீசர், மாவீரர் அலெக்சாண்டர், சார்லி சாப்ளின் போன்றோருக்கும் இடது கைப்பழக்கம்தான். அவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற்று வரலாற்றில் இடம்பெறவில்லையா? ஏன், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜான்சிராணி, தன் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்து, இடது கையால் வாளினைச் சுழற்றிச் சுழற்றி விரட்டி அடித்ததை மறந்து விட்டீர்களா? அதுமட்டுமல்ல... உலகின் அழகிய ஓவியமான மோனலிசாவை ஓவியர் லியனோர்டோ டாவின்சி தனது இடது கையால்தான் வரைந்தார்" என்றார் டாக்டர்.

"டாக்டர் நீங்க சொல்லச் சொல்ல எனக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி, மறுபக்கம் ஆச்சரியமாக இருக்கிறது. இனிமேல் எங்க மகளை நாங்க திட்டமாட்டோம். அடிக்க மாட்டோம்" என்றனர் அவளின் பெற்றோர்.

– 'வானொலி அண்ணா' என். சிவஞானப்பிரகாசம்



ஓவியம் : பா. செந்தில்குமார்

# Lending Hand

A girl with her parents came to visit a psychiatrist Dr. Mahendra Boopathi.

"Good morning doctor. This is our daughter, studying in 2nd standard. Of late, she uses her left hand for writing, eating and taking any material. You only need to stop her left-hand habit. Please correct her".

"Are you worried for this! This is not so serious to feel bothered about it. Do you know how many genius people are left-handed?" said the doctor.

"Is it?"

"Yes. Julius Caesar, Alexander the Great, Charlie Chaplin were all left-handed. Didn't they succeed in life and enter into the history? Have you forgotten that the freedom fighter, Rani of Jhansi held her baby close to her bosom and drove the British away swinging her sword in her left hand? Not only that, Leonardo da Vinci drew the world famous beautiful Monalisa in his left hand", said the doctor.

The parents said, "We are happy on one hand and surprised on the other, after listening to you. We will not scold or beat our daughter", said her parents.

– 'Vanoli anna' N. Sivagnanaprakasham

Translated by– Saranya

ஆகஸ்ட் 15
சுதந்திர தினம்

தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும்.



# ஜெல்லி மீன்களுக்கு மரணமே கிடையாதாமே!

**அதிக நாட்கள் கெட்டுப்போகாத உணவுப்பொருள் ஏதேனும் இருக்கிறதா?**

– ஜெ.அனுதர்ஷிகா, 7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, நாமக்கல்.

நாள் கணக்கில் அல்ல, ஆண்டுக்கணக்கில் கெட்டுப்போகாத உணவுப் பொருள் தேன். தேனில் குறைந்த அளவு நீரும், மிக அதிகளவில் சர்க்கரையும் இருப்பதால் அதில் பாக்டீரியா வளராது. அதனால், அது கெட்டுப்போவதில்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



**ஜெல்லி மீன்கள் இறப்பதில்லையா?**

– பி.ஜோன்ஸ், 9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்.

ஒரு குறிப்பிட்ட ஜெல்லி மீன் வகைகள் இயற்கையான மரணம் அடைவது இல்லை என்பது உண்மைதான். வெவ்வேறு வடிவங்கள், நிறங்களில் காணப்படும் ஜெல்லி மீன்களைப் பார்க்கும்போதே நமக்குப் பிடித்துவிடும். ஜெல்லி மீன்களில் டர்ரிடோப்சிஸ் டோர்னி (Turritopsis dohrnii) எனும் வகை உண்டு. இந்த வகை ஜெல்லி மீனின் உடல், முதிர்ந்த நிலைக்குச் செல்லும்போது, மீண்டும் இளமையில் வளர்வதைப் போல தொடக்கத்தில் இருந்து பாகங்கள் வளரத் தொடங்கிவிடும். இதன்மூலம், இவை இயற்கையான முறையில் இறப்பது இல்லை. மற்ற உயிரினங்களால் ஆபத்து ஏற்பட்டாலோ, இதுவே எங்கேனும் போய் சிக்கிக்கொண்டாலோதான் இவற்றுக்கு மரணம் ஏற்படும்.





**விளையாட்டுப் போட்டிக்கு மட்டுமேதான் ஒலிம்பிக் பதக்கம் வழங்கப்படுகிறதா?**

– எஸ்.இஷ்ரத் ஜஹான், 6ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி. பள்ளி, கன்னியாகுமரி.

கலைத் துறையில் சாதிப்பவர்களுக்கும் ஒலிம்பிக் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம், கட்டடக்கலை உள்ளிட்டவற்றில் சிறப்பான சாதனை செய்தவர்கள் ஒலிம்பிக் பதக்கம் பெற்றுள்ளனர். இப்படி, பல்துறையினருக்குப் பதக்கம் வழங்கும் முறை, 1912 முதல் 1948ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. அதன்பிறகு, பல்வேறு காரணங்களால் இம்முறை கைவிடப்பட்டது.



**வாத்து மடையன் என்று சொல்கிறார்களே... உண்மையில் வாத்துகளுக்கு அறிவு கிடையாதா?**

– சி.சரவணன், 8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை.


வாத்துக்கு அறிவு மந்தம் என்று கதைகளில் எழுதுகிறார்கள். அதுவே எல்லோரின் மனத்திலும் அப்படியே பதிந்துவிடுகிறது. உண்மையில் வாத்து மிகவும் அறிவுள்ள பறவை என்று அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், நரி தந்திரம் செய்யக்கூடியது, காட்டுக்கே தலைமை தாங்குவது சிங்கம் போன்றவையும் மனிதர்களால் உருவாக்கப்பட்டவையே. மனிதர்களின் குணங்களை விலங்குகளுக்குப் பொருத்திப் பார்க்கக்கூடாது என்று எழுத்தாளர்கள் வலியுறுத்துகிறார்கள்.

## கேளுங்கள்!

உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : 'அறிவோம் ஆயிரம்', 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 600 006. மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in


**ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்**



தேசிய கீதம், 'பாரத் விதாதா' என்ற தலைப்பில் தாகூர் நடத்திய 'தத்வபோதினி பத்ரிகா' என்ற பத்திரிகையில் 1912இல் வெளியானது.

# பலூன் ஹெலிகாப்டர்

**ஹெலிகாப்டர் பறப்பது போலவே பலூனை வைத்துச் செய்து பார்க்கத் தயாரா?**





**செய்முறை:**

மூன்று பக்கங்களும் விசில் அமைப்போடு இருக்கும் சுழலியில், இறக்கைகளைப் பொருத்தவும்.

பலூனின் வாய்ப்பகுதியில் சாக்கெட்டைப் பொருத்தி, பலூனை ஊதவும். பலூனில் இருந்து காற்று வெளியேறாமல் பிடித்துக்கொள்ளவும்.


சுழலியுடன் கூடிய இறக்கைகளை, சாக்கெட்டுடன் பொருத்தவும். பிறகு, அவற்றை விட்டுவிட்டால் ஹெலிகாப்டர் போல சத்தம் போட்டு அழகாகப் பறக்கும். நீங்களும் முயற்சி செய்து பாருங்கள்.







## தேவையான பொருட்கள்:

- பலூன் (Balloon)
- பலூனை இணைக்கும் சாக்கெட் (Balloon holder)
- பிளாஸ்டிக் இறக்கைகள்
- விசிலுடன் கூடிய சுழலி (Rotor + whistle)








நன்றி : https://www.arvindguptatoys.com/



**சைல்டு லைன்**

**1098**

(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)

- இது இலவச தொலைபேசி எண்
- இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
- உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்




**ஆகஸ்ட் 15**
**சுதந்திர தினம்**

தேசியக் கொடியில் உள்ள காவி நிறம், தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது.
வெண்மை நிறம் உண்மையையும் அமைதியையும் குறிக்கிறது.
பச்சை நிறம் தேசத்தின் செழுமையையும், வளர்ச்சியையும் குறிக்கிறது.


# புதிர்களோடு விளையாடு

## 1 சரியான பூட்டு எது?




## 2

ஒவ்வொரு வண்ணத்திற்கும் ஒரு மதிப்பு உண்டு. கூர்ந்து கவனித்து, கடைசி கட்டத்தில் உள்ள பச்சையின் மதிப்பு என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள்.







## 3 வயது என்ன?



யாழினி, பாத்திமா, மேரி மூன்றுபேரும் ஒரே தெருவில் வசிக்கும் தோழிகள். ஆனாலும் மூவருக்கும் வயது வித்தியாசம் இருந்தது. ஆம்! ஒரே வயது உடையவர்கள் இல்லை. யாழினிக்கு, பாத்திமாவை விட மூன்று வயது குறைவு. பாத்திமாவை விட, மேரிக்கு மூன்று வயது அதிகம்.

இவர்கள் மூன்று பேரின் வயதின் கூட்டுத்தொகை 42. இது மேரியின் வயதை விட, 25 அதிகம். இப்போது மற்ற இருவரின் வயதையும் கண்டுபிடியுங்கள்.

## 5 இந்த வண்ணங்களின் எடைகளைக் கண்டுபிடியுங்கள்.




## 4 இக்கட்டங்களை எந்தப் பக்கம் கூட்டினாலும் 75 வரும்படி நிரப்புங்கள்.

| | | |
|---|---|---|
| 30 | | |
| | 25 | 15 |
| | | 20 |

தொகுப்பு: ஜி. சரண்


விடைகள் 22ஆம் பக்கம்



ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்

ரவீந்திரநாத் தாகூரே 'Morning Song of India' என்ற தலைப்பில் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

# மாணவர்




எஸ். விஷ்ணுகுமார், 8ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
சேண்பாக்கம்,
வேலூர் மாவட்டம்.



சு. அன்பரசன், 8ஆம் வகுப்பு,
அ.ஆ.மே.நி.பள்ளி,
கடையநல்லூர்,
தென்காசி.




ஜ. அபிஷேக், 9ஆம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி,
சீப்பாலக்கோட்டை,
தேனி மாவட்டம்.



லோகேஸ்வரி ரா, 7ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
சிறுகுடல்,
பெரம்பலூர் மாவட்டம்.



டி. மஹாலட்சுமி, 6ஆம் வகுப்பு,
அ.மா.மே.நி.பள்ளி,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம்.



ப. கரோஸ்லின், 9ஆம் வகுப்பு,
அ.ம.மே.நி.பள்ளி,
ஆறுமுகநேரி,
தூத்துக்குடி மாவட்டம்.



ரா.திவ்யா, 7ஆம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி,
கள்ளப்பெரம்பூர்,
தஞ்சை மாவட்டம்.

# கலைவண்ணம்



ர. நவீன்குமார், 8ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
இலட்சுமாயூர்,
சேலம் மாவட்டம்.



மு. மணிகண்டன், 7ஆம் வகுப்பு,
அ.ஆ.மே.நி.பள்ளி,
குமாரபாளையம்,
நாமக்கல் மாவட்டம்.



ப. விஜய், 9ஆம் வகுப்பு,
அ.ஆ.மே.நி.பள்ளி,
காளப்பநாயக்கன்பட்டி,
நாமக்கல் மாவட்டம்.



பு. சந்துரு, 8ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
சிறுகுடல்,
பெரம்பலூர் மாவட்டம்.

# மாணவர் கடிதம்

ஜூலை மாதத் தேன்சிட்டு இதழில் வெளியான, ஆண்டெனா வேன் எப்படி இயங்குகிறது என்பதைப் படத்தோடு விளக்கி இருப்பது அருமை.

- ஆர்.பத்மபிரியா,
அரசு உயர்நிலைப் பள்ளி, சென்னை.

* * * * * * * * *

அழகான உண்டியல் செய்வது எப்படி? என்பதைத் தேன்சிட்டு இதழில் நாமே செய்வோம் பகுதியைப் படித்துச் செய்து மகிழ்ந்தேன். சேமிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் விதமாக இருந்தது.

- எல்.மைவிழி, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
காஞ்சிபுரம்.

* * * * * * * * *

தூக்கணாங்குருவிக் கூட்டை எங்கள் ஊர் வயல்வெளிகளில் பார்த்தது உண்டு. இப்படியும் கூடு கட்டுமா? என்ற நிறைய கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் தெளிவான விளக்கத்துடன் சொல்லியிருக்கிறது இந்தத் தேன்சிட்டு இதழ்.

- எஸ்.சரத், அ.மே.நி.பள்ளி,
தென்காசி.

* * * * * * * * *

அறிவோம் ஆயிரம் பகுதியில் HB,2B பென்சிலைப் பற்றிய விவரம் புதுமையாக இருந்தது. ரசித்து படித்தேன்.

- பி.சாந்தகுமார், ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கோபி.

* * * * * * * * *

இரத்தத்தின் நிறம் சிவப்பு என்பது தெரியும். ஆனால் அதில் இத்தனை வகைகள் இருக்கின்றன என்பதை முகில் படக்கதை மூலம் வாசித்துத் தெரிந்துகொண்டேன். ஒவ்வொரு தேன்சிட்டு இதழில் வெளிவரும் படக்கதை பகுதியை நான் விரும்பிபடிப்பேன்.

- டி.திவ்யா, அ.மே.நி.பள்ளி,
மதுரை.

* * * * * * * * *

தேன்சிட்டு இதழில் கடைசிப் பக்கத்தில் வெளியான ஜூலை மாதச் சிறப்பு தினங்களையும் அம்மாதத்தில் பிறந்த கல்வியாளர்கள் பற்றியும் படித்து அறிந்தேன். பயனுள்ள தகவல்.

- பா.தனிஷ், அ.உ.நி. பள்ளி,போரூர்.
சென்னை.

* * * * * * * * *

மனிதர்களுக்கு மட்டும்தான் உணர்ச்சி உண்டு என்று நினைத்திருந்தேன்.ஆனால் தாவரங்களுக்கும் அது உள்ளது என்பதை தாவரம் அறிவோம் பகுதியில் படித்துத் தெரிந்து கொண்டேன். மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது.

- பா.பாவனா, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கள்ளக்குறிச்சி.

* * * * * * * * *

ஜூலை மாதத் தேன்சிட்டு இதழில் வெளிவந்த ஞாபக விளையாட்டை என் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடி மகிழ்ந்தேன்.

- ரா.ராஜேஷ், நகராட்சி நடுநிலைப் பள்ளி,
கோவை.

# குழந்தைக் கவிஞர் செல்லகணபதி



உயர்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு படிக்கும்போதே குழந்தைப் பாடல்கள் எழுதத் தொடங்கியவர்தான் செல்லகணபதி.

தற்போது கோயம்புத்தூரில் வசிக்கும் கவிஞர் செல்ல கணபதி, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர், சிறுவர்களின் வயது, பிரிவுகளின் அடிப்படையில் குழந்தைப் பாடல்களைப் படைத்த பெருமைக்குரியவர். 3 வயது முதல் 8 வயது வரை மலரும் மொட்டுகள் என்றும் 9 வயது முதல் 11 வயது வரை வளரும் பூக்கள் என்றும் 12 வயது முதல் 16 வயது வரை மணக்கும் பூக்கள் என்றும் பாடல்களைப் பகுத்து தந்திருக்கிறார். இதுவரை, குழந்தைகளுக்காக 40-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார்.




'நூறு ரூபாய்' என்ற பாடல் 'மணக்கும் பூக்கள்' பிரிவில் இடம் பெறுகிறது.

"பசிக்கு மீனைக் கொடுக்காதே,
பயிற்சி கொடுப்பாய் மீன் பிடிங்க!
பசிக்கு உழைத்துப் பிழைக்கின்ற
பக்குவம் கற்றுக் கொடுப்பாயே."

இவருடைய 'வெள்ளை முயல்' நூலிலுள்ள குழந்தைப் பாடல்கள் சிங்கப்பூர் பள்ளிப் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. 2015ஆம் ஆண்டு இவருடைய 'தேடல் வேட்டை' குழந்தைப் பாடல்கள் நூல் 'பால சாகித்ய புரஸ்கார்' விருது பெற்றது. தற்போது கோயம்புத்தூரில் வசிக்கும் கவிஞர் செல்லகணபதி, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் சீடர். குருவின் மீது கொண்ட அன்பினால் 'வள்ளியப்பா இலக்கிய வட்டம்' என்கிற அமைப்பை நடத்தி வருகிறார்.

- சுகுமாரன்


## புதிய பாதை உருவாக்கியவர்

அமெரிக்காவில் 1984ஆம் ஆண்டு பிறந்த பெண் கெயில் லுக்காஃப் (Kyle Lukoff). அவருக்குப் பதினான்கு வயது இருக்கும்போது பள்ளி விடுமுறையில் ஒரு புத்தகக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். புத்தகங்களுடன் இருப்பது அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. பள்ளிக்கூடம் திறந்த பிறகு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அந்தக் கடைக்கு வேலைக்குச் சென்றார்.

கல்லூரியில் சட்டப்படிப்பு படித்த கெயிலுக்கு, புத்தகக் கடை நினைவாகவே இருந்தது. அது தொடர்பாகப் படிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று தேடினார். நூலகருக்கான படிப்புப் பற்றி தெரிய வந்து, அதில் சேர்ந்தார்.

பெண்கள் மட்டுமே படிக்கும் கல்லூரியில்தான் கெயில் படித்தார். அங்கேதான், தான் பெண்ணாகப் பிறந்தாலும், மனம் ஆணைப் போல இருக்கவே விரும்புவதை உணர்ந்தார். அதனால் "இனிமேல் நான் பெண் இல்லை, ஆண்" என்று வெளிப்படையாக அறிவித்தார்.






படிப்பு முடிந்ததும், ஒரு நூலகத்தில் அவருக்கு வேலை கிடைத்தது. அப்போது அவர், முழு ஆணாகவே மாறிவிட்டார். அந்த நூலகத்தில் அவரைப் போலப் பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறியவர்கள் பற்றிய நூல்களே இல்லை. அப்படியான நூல்களை வாங்க வேண்டும் என்று நூலகத் துறைக்குக் கடிதம் எழுதியும் பலன் இல்லை. அம்மாதிரியான கதையைத் தானே எழுதுவதற்கு முடிவு எடுத்தார். அதுவும் சிறுவர்களுக்கான நூல். எளிமையான மொழியில் அவர் எழுதிய 'When Aiden became a brother' என்கிற நூல் மிகவும் பிரபலமானது.

அவர் எழுதிய நூலை மாணவர்கள் படிக்கக்கூடாது என்று ஒரு பள்ளியில் தடை விதித்தார்கள். இந்தச் செய்தி அமெரிக்கா முழுக்கப் பரவியது. கெயில் லுக்காஃப் சோர்ந்துவிடவில்லை. பாலினம் மாறுதல் தொடர்பாக இன்னும் அதிகமாக எழுதினார். டூ பிரைட் டு சீ (Too bright to see) எனும் நூல் உலகம் முழுக்கப் பிரபலமானது. 'நியூ பெரி' எனும் உயரிய விருதும் கிடைத்தது. 'இஃப் யூ ஆர் எ கிட் லைக் கவின்' (If you're a kid like Gavin) என்றொரு நூலும் எழுதியிருக்கிறார்.

- சிந்தன்



ஆகஸ்ட் 15
சுதந்திர தினம்



தேசியக் கொடியின் நடுவில் உள்ள அசோகச் சக்கரம், சாரநாத் சிம்மத்தூணின் பீடத்தில் உள்ளது போன்ற வடிவம் கொண்டுள்ளது.

# எங்க ஊரு வேடர்காலனி

## (ஆலத்திவச்சினம்பாளையம்)

**கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்டாரத்தில் நீலகிரி மலையின் அடிவாரத்தில் அடர்வனத்தை ஒட்டி பவானி ஆறு மற்றும் ஓடைகளாலும் சூழப்பட்ட பகுதியில் அமைந்துள்ள சிற்றூர்தான் வேடர்காலனி (ஆலத்திவச்சினம்பாளையம்).**

**எங்கள் கிராமத்தின் ஒருபுறத்தில் பாலப்பட்டி என்ற கிராமமும் (கன்னட மொழியில் 'ஆலட்டி') மறுபுறம் வச்சினம்பாளையம் கிராமமும் அமைந்துள்ளதால் ஆலத்திவச்சினம்பாளையம் (ஆலட்டிவச்சினம்பாளையம்) எனப் பெயர் பெற்றதாகப் பெரியோர்கள் இவ்வூர்ப் பெயர்க்காரணம் கூறுவர். மேலும் கடந்த எண்பது தொண்ணூறுகளில் இலங்கைப் போரினால் வாழ்விழந்த தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம் அமைத்து அடைக்கலம் தந்ததும் இவ்வூர்தான்.**

அவர்கள் பேசும் தமிழும், பாரம்பரிய உணவுகளும் சிறப்பம்சங்கள்ஆகும். சுமார் 500 குடும்பங்களாகப் பலதரப்பட்ட மக்களும் இணைந்து ஒற்றுமையாக வாழும் நிலையில் தோட்டங்களும் வனப்பகுதியும் சூழ்ந்துள்ளதால் விவசாயத் தொழிலும் கால்நடை வளர்ப்பும் நடைபெறுகிறது. கல்விக்கென காமராஜர் உருவாக்கிய அரசினர் நடுநிலைப்பள்ளி இயங்கிவருகிறது. ஆறு மைல் தொலைவில் மருத்துவ வசதி கிடைக்கிறது. இலங்கைத் தமிழர் முகாமில் இருந்து எனது நண்பர்கள் கொண்டுவரும் தேங்காய்ப்பாலில் செய்யப்படும் இனிப்புப்பண்டம் 'துதல்' மற்றும் 'சம்பல்' எனக்குப் பிடித்தமான சிறப்பு உணவாகும். மேலும் இங்குள்ள தொல்பழங்குடி மக்களின் திருவிழாக்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தரும் வகையில் இசைக்கருவிகளோடு கொண்டாடப்படுகிறது.


யானைகளின் வழித்தடத்தில் அமைந்துள்ளதால் யானைகளை அடிக்கடி காணலாம். அதுமட்டுமல்ல, குரங்குகள் கூட்டம் கூட்டமாக வந்து சிலகாலம் தங்கிச்செல்வதும் வாடிக்கைதான். குறிப்பிட்ட சில மாதங்களில் பல நிறங்களில் அழகழகான பட்டாம்பூச்சிகள் அலை அலையாகப் பறந்து வந்து எங்கள் ஊரில் வண்ணக்கோலம் போடும்.

**– ஸ்வேதா, எட்டாம் வகுப்பு,**
**ஊ.ஒ.ந.நி.பள்ளி,**
**ஆலத்திவச்சினம்பாளையம்,**
**காரமடை ஒன்றியம், கோவை மாவட்டம்.**









**ஆகஸ்ட் 15**
**சுதந்திர தினம்**



'ஜன கண மன' பாடல் முதன் முதலாக 1911ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பட்டது.



# பேய்க்கணவாய் பேசுகிறேன்

- வணக்கம். நான்தான் பேய்க்கணவாய் பேசுகிறேன். பேய் என்றதும் பயந்து விடாதீர்கள். கணவா, கடமா என்று நான் மீனவர்களால் பல பெயர்களில் சுட்டப்படுகிறேன். என்னை ஆங்கிலத்தில் Octopus (ஆக்டோபஸ்) என்று அழைப்பார்கள். இதற்கு 'எட்டு கால்கள் கொண்ட விலங்கு' என்று பொருள். மெல்லுடலிகள் தொகுப்பைச் சேர்ந்த தலைக்காலிகள் குடும்பத்தில் இருப்பவன் நான். எங்கள் குடும்பத்தில் ஊசிக்கணவாய் (Squid), ஓட்டுக்கணவாய் (Cuttlefish) என்று பல உறுப்பினர்களும் உண்டு.



- நாங்கள் 1 அடி முதல் 14 அடி நீளம் வரை வளருவோம். எங்களுக்குப் பின்னால் உள்ள இரண்டு அமைப்புகளைக் கால் போலவும், முன்னால் இருப்பவற்றைக் கை போலவும் பயன்படுத்துவோம். ஆக எங்களுக்கு இரண்டு கால்கள், ஆறு கைகள் உண்டு.
- எங்கள் கை மற்றும் கால்களிலும் பல நியூரான்கள் உண்டு என்பதால் அவை தன்னிச்சையாகவும் இயங்கக்கூடியவை. இதுபோன்ற பல பண்புகளால் நாங்கள் புத்திசாலிகளாக இருக்கிறோம். ஒரு கண்ணாடி ஜாடியில் வைத்துப் பூட்டிவிட்டால் உள்ளிருந்தபடியே அதைத் திறந்துவிடுவோம்!
- நிலத்தில் உள்ள பச்சோந்திகள் போல ஆபத்துகள் நிறைந்த சூழலில் மறைந்து வாழ நாங்களும் உடனடியாக நிறம் மாறிவிடுவோம். இந்தப் பண்பை உருமறைப்பு (Camouflage) என்பார்கள். எங்கள் தோலில் க்ரோமடோஃபோர் (Chromatophore) என்ற ஒருவகை செல்கள் உண்டு. இவை சுருங்கி விரிவதால் எங்கள் தோலின் நிறம் மாறும். இது மட்டுமல்லாமல் பாப்பிலே என்ற ஒரு வகை தோல் செல்களைச் சுருக்கியும் விரித்தும் தோலை சொரசொரப்பாகவோ வழுவழுப்பாகவோ கூட மாற்றிக்கொள்வோம்!
- எங்கள் இனத்தைச் சேர்ந்த நீலவளைய கணவாய் (Blue ringed octopus) நச்சுத்தன்மை வாய்ந்தது. அந்த நச்சு மனிதர்களுக்கு ஆபத்தைக் கொடுத்துவிடும். பசிபிக் கடற்பகுதியில் வசிக்கும் அவற்றிடம் மட்டும் கொஞ்சம் கவனமாக இருங்கள்.
- அந்தமான் தீவுகளைச் சேர்ந்தவர்கள் எங்களை 'மை மீன்' (Ink fish) என்ற பொருள்படும்படி அழைக்கிறார்கள்.
- ஒரு காலத்தில் பெரிய பேய்க்கணவாய்களைக் கடல் பூதம் என்று பயப்படுவார்கள். ஆனால் பிறகு அப்படி ஒன்று இல்லை என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள்.
- நாங்கள் இருக்கும் பகுதிகளில் மீன் பிடிப்பதற்காக மீன் கூடை வைத்தால்கூட உள்ளே இருக்கும் மீன்களைத் தின்றுவிடுவோம். அதனால், ஆய்வகங்களிலும் நாங்கள் தப்பிக்காதபடி தொட்டிகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள விஞ்ஞானிகள் போராடுவார்கள். எங்களை வைத்து என்ன ஆய்வு என்று நினைக்கிறீர்களா? அறிவு, தன்னுணர்வு, கைகளைப் பயன்படுத்தும் முறை போன்ற எங்களுடைய பல தனித்துவங்களைப் பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

– நாராயணி சுப்பிரமணியன்







**ஆகஸ்ட் 15**
**சுதந்திர தினம்**

ஐந்து பத்திகள் (13 வரிகள்) கொண்ட
நம் தேசிய கீதத்தை 52 நொடிக்குள் பாட வேண்டும்.

# பொம்மலாட்டம்



**இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று அண்ணல் காந்தியடிகள் கூறியதைப்போல, நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளும் கிராமப் புறங்களில்தான் நிகழ்த்தப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றன. அக்கலைகளை தோல் பாவைக்கூத்து, மரப்பாவைக் கூத்து என்றும் சொல்லுவதுண்டு. இதில் மரப்பாவைக் கூத்தை பொம்மலாட்டம் என்றே பலரும் அழைக்கின்றனர்.**

பொம்மலாட்டம் என்பது பொம்மைகளை அபிநயத்தோடு ஆட்டிக் காட்டும் ஓர் கலையாகும்.

'நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று'

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார் எனில் இவ்வகை ஆட்டங்கள் எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக இங்கே நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பதை அறிந்துகொள்ளலாம். இதைச் சிறார்கள் மகிழ்ச்சியாக கண்டுகளிப்பர்.





### திரைக்குப் பின்னால்...

பொம்மலாட்டத்தில் எட்டுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் இருப்பர். இவர்களில் நான்கு பேர் பொம்மைகளை இயக்கவும், மற்ற கலைஞர்கள் இசைக் கலைஞர்களாகவும் உதவி செய்பவர்களாகவும் இருப்பர். பெரும்பாலும் ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், ஜால்ரா போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்துவர். தற்போதைய நவீன உலகில் டிஜிட்டல் முறையில் ஒலிக் கோர்ப்பு நடைபெறுகிறது.

அடர் வண்ணத் திரையின் பின் நின்று, அக்கயிறை இழுத்துப் பொம்மைகளை ஆட்டி வைப்பார்கள். இவர்களை சூத்திரதாரி என்பார்கள்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னிருந்து தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் இக்கலை புத்துயிர் பெற்றுத் தழைத்து வந்திருக்கிறது.

பண்டைய கிரேக்கம், இத்தாலி போன்ற நாடுகளிலும் இப்படியான பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் நடந்துள்ளன எனத் தெரியவருகிறது.

## வடிவ மாற்றம்

தொடக்கத்தில் உலோகம், மரம் போன்றவற்றில் இருந்து இந்தப் பொம்மைகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் காகிதக்கூழ், கற்பொடிக் கலவையைக் கொண்டு தயாரிக்கப்பட்டன. கண்களைத் திறந்து மூடும் பிளாஸ்டிக் பொம்மைகளும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகின்றன.

இன்று அரசு தனது விழிப்புணர்வுப் பிரசாரங்களுக்காகப் பொம்மலாட்டங்களை நடத்தி வருகின்றது. உலகம் முழுவதும் வெவ்வேறு வடிவங்களில் பரவியுள்ள ஒப்பற்ற கலை வடிவமே பொம்மலாட்டம்.

– அன்பு

### புராணத்தில் இருந்து சமூகத்திற்கு...

தொடக்க காலங்களில் புராணக்கதைகளே பொம்மல்லாட்டமாக நடத்திக் காட்டப்பட்டன. வெகு காலத்திற்கு பின்னரே சமூகக் கருத்துகள் உள்ளடங்கிய காட்சிகளும் நடைபெறத் தொடங்கின.

### பொம்மைகள்

ஆண் - பெண் பொம்மைகளை மரத்தினாலும் துணியினாலும் செய்து வர்ணப் பூச்சுவேலை செய்திருப்பர். கதைகளின் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு பொம்மைகளை அலங்கரித்து, அவற்றின் கைகள், கால்கள், தோள்பட்டை, இடுப்பு என மடங்கும் தன்மை உடைய உறுப்புகளை கறுப்பு கயிறுகளால் பிணைத்திருப்பர்.






**ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்**

நம் தேசியக் கொடி 1947ஆம் ஆண்டு ஜூலை 22இல் அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



# டினோசர்களின் கதை

எழுத்து: அஞ்சலி அலப்பட்,
ஓவியங்கள்: ஜினா ஜமேஷ்,
தமிழில்: கருமலை மலர்விழி











































நன்றி : www.storyweaver.org.in

# விறுவிறு வாலிபால்



**வரலாறு:** ஆடுபவர்களின் உடலுக்கு உற்சாகமும் பார்வையாளர்களுக்கு விறுவிறுப்பும் தரும் ஆட்டம் வாலிபால். இது தொடக்கக் காலத்தில் மின்டோனெட் (Mintonette) என்று அழைக்கப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ஜி. மோர்கன் (William G. Morgan), 1895ஆம் ஆண்டில் வாலிபால் விளையாட்டுக்கான விதிமுறைகளை உருவாக்கினார்.

கூடைப் பந்தாட்டத்தில் இருந்து பந்து, டென்னிஸ் விளையாட்டில் இருந்து வலை, கைப் பந்தாட்டத்தைப் (Hand ball) போல் கைகளைப் பயன்படுத்துவது, இவைதான் வாலிபால் தோன்றுவதற்கான அடிப்படை காரணம் என்கிறார் மோர்கன்.

1964 ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில்தான் வாலிபால் முதன்முதலாக இடம்பெற்றது.

கேரளாவைச் சேர்ந்த ஜிம்மி ஜார்ஜ், 'இந்திய வாலிபாலின் கடவுள்' என அழைக்கப்படுகிறார்.

**விதிகள்:** இரு அணிகள் மோதிக்கொள்ளும். ஒவ்வோர் அணியிலும் ஆறு பேர் இடம்பெறுவர்.

டாஸ் வென்றவர்கள் செர்வ் (Serve) செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள். எந்த அணி பந்தைத் தவறவிட்டாலும், மற்றோர் அணிக்கு ஒரு புள்ளி வழங்கப்படும். இப்படி, 25 புள்ளிகள் வரை ஆடுவது ஒரு செட் என்று அழைக்கப்படும். இப்படி 5 செட்டுகள் ஆடுவார்கள்.

5 செட்டுகளில் மூன்று செட்டுகளைக் கைப்பற்றும் அணியே வெற்றி பெற்றது. ஒருவேளை, ஒவ்வோர் அணியும் தலா 2 செட்டுகளைக் கைப்பற்றியிருந்தால், 5வது செட் 15 புள்ளிகளுக்கு நடக்கும்.

### விளையாடுபவர்கள் விவரம்:


**செட்டர் (Setter):** அணியை ஒருங்கிணைத்து அடித்து ஆடுபவர்களுக்குப் பந்தை செட் செய்பவர்.

**மிடில் ப்ளாக்கர் (Middle Blocker):** பெரும்பாலும் அணியில் மிக உயரமான நபராக இவர் இருப்பார். எதிரணி அடிப்பதை முதலில் தடுக்க முயல்வது இவரே.

**வீக்சைட் ஹிட்டர் (Weakside hitter):** எதிரணியில் அவுட்சைட் ஹிட்டர் அடிப்பதை எடுத்து ஆடுவதில் இவர் பங்களிப்பு முக்கியமானது.

**அவுட்சைட் ஹிட்டர் (Outside hitter):** அணியில் பந்தை அடித்து ஆடுபவர்களில் முக்கியமானவர். வாலிபால் மைதானத்தின் இடதுபுறம் ஆட்டத்தைத் தொடங்குவார்.

**லிபரோ (Libero):** பந்தை எடுத்து ஆடுவதற்காகவே அணியில் உள்ளவர். பின் வரிசையில் ஆடுபவர். இவரது சீருடை மற்ற வீரர்களிடம் இருந்து வேறுபட்டுக் காணப்படும்.



**மைதானம்:**

வாலிபால் மைதானம் 18 மீ. நீளமும், 9 மீ. அகலமும் கொண்டது. நடுவில் வலை (Net) இருக்கும். வாலிபால் ஆண்களுக்கான போட்டியில் வலையில் உயரம் 2.43 மீட்டர், பெண்களுக்கு 2.24 மீட்டர்.

கூடைப்பந்தின் கனம் அதிகமாக இருந்ததால், வாலிபாலுக்காகப் புதிய பந்து 1900ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்டது. தற்போதைய வாலிபாலின் எடை 260 – 290 கிராம். அதன் சுற்றளவு 65 – 67 செ.மீ.

– அருண்

**ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்**

முதல், கடைசி பத்திகளை மட்டும் கொண்ட தேசிய கீதத்தின் குறுகிய வடிவத்தைப் பாடுவதற்கான நேரம் 20 நொடிகள்.

# கேப்டன் லட்சுமி



சென்னையில் பிறந்து வளர்ந்தவர் அந்தப் பெண். தன் சிறுவயது முதலே நாட்டின் விடுதலையைப் பற்றிக் கனவு கண்டார். அந்நியரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நம் நாட்டை மீட்க நடக்கும் போராட்டங்கள் பற்றித் தெரிந்துகொண்டார். கல்லூரியில் படிக்கும்போது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக நின்று சிறைக்குக்கூடச் சென்றுள்ளார். பிறகு, மருத்துவம் படித்த அவர், சிங்கப்பூருக்குச் செல்லும் சூழல் அமைகிறது. அங்கு சென்றும் இந்தியாவைப் பற்றியே அவரின் சிந்தனை முழுவதும் இருந்தது. சிங்கப்பூரில் அவர், சுபாஷ் சந்திரபோஸைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அதுதான் அவரின் வாழ்வையே மாற்றி அமைக்கிறது.

சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய ராணுவத்தைக் கட்டமைத்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான விடுதலைக் களத்தில் நின்றார். அவரிடம், 'நானும் உங்கள் படையில் சேர்ந்துகொள்கிறேன்' என்று கேட்கிறார் இந்தப் பெண். ஆச்சர்யப்பட்டார் சுபாஷ் சந்திரபோஸ்.

இவரின் துணிச்சலைக் கண்டு, 'ஜான்சி ராணி லஷ்மி பாய்' எனும் பெண்கள் படையை உருவாக்கினார். அதற்கு இப்பெண்ணையே தலைமை தாங்க வைக்கிறார். 500 பெண்களுடன் பிரிட்டிஷ் படையை எதிர்த்துப் போராடச் சென்றார். ஆனால், செல்லும் வழியில் பலருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் தான் கற்ற மருத்துவத்தை வைத்து அவர்களைக் காப்பாற்றினார். இவர் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் நாட்டிற்காக உயிரையே தியாகம் செய்யத் துணிந்தார்.

இத்தனை துணிச்சலுக்குச் சொந்தக்காரர் கேப்டன் லட்சுமி. நம் நாடு விடுதலை அடைந்த பிறகும் மக்களுக்கான சேவைகளில் தன்னைக் கரைத்துக் கொண்டார். இந்திய அரசின் உயரிய விருதான பத்மபூஷண் விருது பெற்றவர்.

2012ஆம் ஆண்டில் காலமானார்.

– மகேஷ்





கேப்டன் லட்சுமி

அட்டை மற்றும் ஓவியங்கள் : பா. செந்தில்குமார்




# நூல்கள் அறிமுகம்










## காசு

**கதை : ச. தமிழ்ச்செல்வன்**

பணம் என்ற ஒன்று எப்படி வந்தது? இயற்கைப் பொருட்களுக்கு விலை எப்படி வந்தது? 'பயன் மதிப்பு' என்றால் என்ன? உழைப்பு எப்படி ஒரு பொருளின் மதிப்பைத் தீர்மானிக்கிறது? சந்தை எப்படி வந்தது? காகிதப் பணம் வருவதற்கு முன்பு எவையெல்லாம் பணமாகப் பயன்படுத்தப்பட்டன என்பவற்றின் மூலமாக, பணத்தின் கதையைச் சொல்லிக் கொடுக்கும் பயன் மிகுந்த புத்தகம்.

## இடஒதுக்கீடு என்றால் என்ன?

**கதை: எம்.எஸ். பொற்கொடி**

பூங்குழலி தனியார் பள்ளியில் படிக்கும் மாணவி. அந்தப் பள்ளியில் கட்டணம் இல்லாமல் படிக்கும் விதமாக ஒரு மாணவி சேர்கிறார். அப்போது பூங்குழலிக்கு எழும் சந்தேகம்தான் இடஒதுக்கீடு என்பது என்ன? அதை அவரின் அப்பா தெளிவாக எப்படித் தீர்த்து வைக்கிறார் என்பதைச் சொல்கிறது இந்தப் புத்தகம்.

## பேருதவி

**கொ.மா. கோதண்டம்**

நம் நாட்டின் தேசிய விலங்கு புலி என்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோல, நம் மாநிலத்தின் தேசிய விலங்கு வரையாடு. அது எங்கெல்லாம் அதிகளவில் இருக்கும் என்பது தொடங்கி, பல செய்திகளைச் சுவாரஸ்யமாகச் சொல்கிறது இந்தப் புத்தகம். கூடுதலாக, அழகான ஒரு கதையும் இருக்கிறது.

மேற்கண்ட மூன்று நூல்களையும் வெளியிட்டது :

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

எண். 68, ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, கல்லூரிச் சாலை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்

இந்த இதழில் இடம்பெற்ற துணுக்குகளைத் தொகுத்தவர் : மகேஷ்.
உதவிய நூல்: கையளவு களஞ்சியம், நூலாசிரியர் டாக்டர் சங்கர சரவணன்,
https://knowindia.india.gov.in

## 11ஆம் பக்க விடைகள் :

**1. சரியான பூட்டு எது?**




**2. வண்ணத்தின் மதிப்பு**

8 x 9 = 72
9 x 4 = 36
8 x 4 = 32
4 = ?


**3. வயது என்ன?**

மூவரின் மொத்த வயது 42.
இதில் 25ஐக் கழித்தால் கிடைப்பது 17.
இதுதான் மேரியின் வயது (17).
இதில் 3ஐக் கழித்தால் கிடைப்பது 14.
இது பாத்திமாவின் வயது(14).
அதில் 3ஐக் கழித்தால் கிடைப்பது 11.
இதுவே யாழினியின் வயது(11).
ஆக, மேரி-17, பாத்திமா -14, யாழினி -11 வயதுடையவர்கள்.

**4. எந்தப் பக்கம் கூட்டினாலும்...**

| | | |
|---|---|---|
| 30 | 5 | 40 |
| 35 | 25 | 15 |
| 10 | 45 | 20 |

**5. வண்ணங்களின் எடை?**




உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?




பள்ளிக் கல்வித் துறையின்
**மாணவர் உதவி எண்**



**14417**


மணற்கேணி
கற்றனைத் தூறும் அறிவு
உனக்கு 'மணற்கேணி' தெரியுமா?
திருக்குறள்ல வருமே… 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு'
இந்தக் குறளுக்கு அர்த்தம் தெரியுமா?
தெரியுமே. தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போல படிக்கப் படிக்க அறிவு பெருகும்.
ஆமாம். நம்ம அறிவை வளர்த்துக்க, மணற்கேணின்னு புது மொபைல் ஆப் வந்திருக்கு. அதில் பாடங்களை எல்லாம் அனிமேஷன் வச்சு விளக்கி இருக்காங்க.
நம்ம டீச்சர்ஸ் எல்லாம் அதை வைச்சு பாடம் நடத்தப் போறாங்க சீக்கிரமே. படமா பார்த்தால் இன்னும் ஈஸியா புரியும்.
அப்படியா? நல்லா புரிஞ்சா நல்லா படிக்கலாம். ஹை! ஜாலி!


பிங்க் கலர் பொண்ணுங்க கலர் கிடையாது!
ஹேப்பி பர்த்டே சீனு! இந்தா பிறந்த நாள் பரிசு…
தேங்ஸ் மஞ்சு.. என்ன பரிசு? ஹே… பென்சில் பாக்ஸ், ஏன் இந்த கலர் வாங்குன.. இது பொண்ணுங்க கலர்..
யார் சொன்னா? பொண்ணுங்க கலர்னு..
என் அண்ணா கிட்ட கூட பிங்க் கலர் சட்டை இருக்கு… அவனும் பையன்தான். கலர்ல என்ன பொண்ணு கலர், பையன் கலர்…
ஆமால்ல… அப்போ இனி நானும் பிங்க் கலர்ல வாங்குறேன்..

Then Chittu Fortnightly Registered with RNI No: TNTAM/2022/82345.
Postal Registration No: TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No: TN/PMG(CCR)WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 01-05 August 2023 Posted at Egmore, RMS/ Patrika Channel
இதழ் 17

# ஆகஸ்ட் மாதம் பிறந்த நாள் சிறப்பு தினங்கள்



## பராக் ஒபாமா

04

அமெரிக்காவின் முன்னாள் அதிபரான பராக் ஒபாமா (Barack Obama ) பிறந்த நாள். இவரின் செயல்பாடுகளை கௌரவிக்கும் விதமாக 2009 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது.



## ஆகஸ்டு 15 இந்திய விடுதலை நாள்

அந்நியர்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்த இந்தியாவைப் போராடி மீட்ட நாள் இன்று. இந்திய விடுதலை நாள். காந்தியடிகளின் தலைமையில் அகிம்சை முறையில் விடுதலை பெற்ற பெருமையும் நம் நாட்டிற்கு உண்டு. 2023ஆம் ஆண்டில் எழுபத்தி ஆறாம் விடுதலை நாளைக் கம்பீரத்தோடு கொண்டாடுகிறது இந்தியா. நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்குத் தங்கள் இன்னுயிரை நீத்த வீரர்களை நன்றியோடு நினைவுகூர்வோம்.

## நீல் ஆல்டன் ஆம்ஸ்ட்ராங்



05

புகழ்பெற்ற விண்வெளி வீரர் நீல் ஆல்டன் ஆம்ஸ்ட்ராங் (Neil Armstrong) பிறந்த நாள். 1930ஆம் ஆண்டில் பிறந்த இவர், 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதி அன்று நிலவில் முதன்முதலாகக் கால் பதித்தார்.

06



## ஹிரோஷிமா நாள்

இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானின் முக்கிய நகரமான ஹிரோஷிமா (Hiroshima) மீது 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஆறாம் தேதியன்று குண்டு வீசப்பட்டது. அந்தக் குண்டுக்கு லிட்டில் பாய் (Little Boy) என்று பெயர். பேரழிவைச் சந்தித்து மீண்டு எழுந்தது ஹிரோஷிமா.

10



## சர்வதேச சிங்க தினம்
## World Lion Day

விலங்குகளில் தனித்துவமானது சிங்கம். அவற்றைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த ஆண்டுதோறும் இந்த நாளில் சர்வதேச சிங்க தினம் கொண்டாடப்படுகிறது. குஜராத், ஜூனாகத் மாவட்டத்தில் கிர் சிங்கங்கள் சரணாலயம் உள்ளது.



## விக்ரம் சாராபாய்

இந்தியாவின் புகழ்பெற்ற இயற்பிய லாளர் விக்ரம் சாராபாய் (Vikram Sarabhai) பிறந்த நாள். இந்திய விண்வெளித் திட் டத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள விண்வெளி மையத்திற்கு இவர் பெயரே சூட்டப்பட்டுள்ளது.

12

## உலக யானைகள் தினம்
## World Elephant Day



ஆகஸ்ட் 12: சுற்றுச்சூழலில் யானைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்காகவே 2012ஆம் ஆண்டு முதல் இன்றைய தினம் சர்வதேச யானைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

உங்களுக்கு தேன்சிட்டு இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு, 8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.